முதல் தரமாக வேண்டுமெனில் ஞானம் மற்றும் யோகத்தை நடைமுறையில் கொணருங்கள்.

இன்று சத்தியமான ஆசிரியர் தனது உயர்ந்த அறிவுரைகளை நடைமுறைப் படுத்தும் இறை மாணவர்களை பார்க்கின்றார். இறை மாணவர் ஒவ்வொருவரும் ஈஸ்வரிய கல்வியை எந்தளவிற்கு கையாளுகிறார்கள் என்பதை கவனிக்கின்றார், பாடம் புகட்டுபவர் ஒருவரே, பயிலும் பாடமும் ஒன்றே இருப்பினும் பயிலும் மாணவர்கள் நம்பர்வாரியாக உள்ளனர். தினசரி பாடமான முரளி மூலமாக ஒவ்வொரு இடத்திலும் ஒரே பாடம் பயிலுகின்றனர், கேட்கின்றனர். முரளியெனும் பாடம் அனைத்து இடத்திலும் ஒன்றே, தேதி மாறுபட்டாலும் முரளி ஒன்றே, இருப்பினும் வரிசைக்கிரமமாவது ஏன்? ஏன் நம்பர் வருகிறது? ஏனெனில் இந்த ஈஸ்வரிய பாடம் பயிலுவதற்கான விதிமுறை யாதெனில், கேட்பது வேண்டும். எனவே, அனைவரும் கேட்பது ஒன்றாகயிருப்பினும் கையாளுவதில் வேறுபாடு ஏற்படுகிறது. அனை வருக்கும் நான் நம்பர் ஒன் ஆக வேண்டும் என்ற லட்சியம் ஒன்றே உள்ளது. அப்படி லட்சியம் இருக்கிறதல்லவா? இலட்சியம் நம்பர் ஒன் ஆக வேண்டும் என்றே இருந்தாலும் ரிசல்ட்டில் நம்பவர் வாரியாக வருகின்றனர் ஏனெனில் இலட்சியத்தை இலட்சியத்தில் கொண்டு வர வேண்டும். இதில் இலட்சியமும் இலட்சணமும் வேறுபாடாகிறது.

இந்த படிப்பில் பாடங்களும் அதிகமில்லை. நான்கு பாடங்களை கையாள வேண்டும். இதில் என்ன கடினம். மேலும் நான்கு பாடங்களும் ஒன்றோடு ஒன்று தொடர்புள்ளது. ஆக ஒரு பாடம் ஞானம். முழுமையான விதிப்படி கையாண்டாளே அதாவது ஞானத்தின் ஒவ்வொரு வார்த்தையையும் நடைமுறைப் படுத்தினாலே, ஞானமென்பதே முக்கியமான இரு வார்த்தை படைப்பு மற்றும் படைப்பவர், தந்தை மற்றும் ஆதி பற்றியதாகும். படைப்பவரான தந்தையைப் பற்றி புரிந்தாலே தந்தையின் அறிமுகம், சம்மந்தம் தெளிவு ஏற்பட்டாலே போதும். படைப்பவர் அவரது முதல் படைப்பான நான் சிரேஷ்ட ஆத்மா மற்றும் ஆத்மாவான எனக்கு இம்மாபெரும் படைப்பாகிய நாடகத்தில் முழு கல்பத்திலும் என்னென்ன நடிப்பு உள்ளது இந்த ஞானம் முழுவதும் அனைவருக்கும் இருக்கிறதல்லவா. ஆனால் உயர்ந்த ஆத்மாவாகி ஒவ்வொரு நேரமும் உயர்வாக நடிப்பது இதில் சில சமயம் நினைவு இருக்கிறது. சில சமயம் மறந்து விடுகிறது, ஞானம், யோகம் இரண்டுமே இந்த இரு சொல்லின் (நினைவு, மறதி) ஆதாரத்திலே யேதான் அமைந்துள்ளது. ஞானமும் யோகமும் இணைந்தே உள்ளது. ஞானி ஆத்மாவானவர் அவசியம் யோகியாகவும் இருப்பார், ஆக ஞானமும் யோகமும் இணைந்தே உள்ளதல்லவா. அப்படி ஞானி, யோகியாக இருப்பவரின் தாரணை உயர்வாக இருக்குமா? பலவீனமாக இருக்குமா? இயல்பாகவே உயர்வானதாகவும் சுலபமாகவும் இருக்குமல்லவா தாரணை கடின மாகுமா! ஞானி யோகியான ஆத்மாவின் ஞானம், யோகம் இல்லையென்றாகிறதா? ஞானிதான் ஆனால் ஞானியின் மனோநிலை இல்லை, யோகம் செய்பவர் அவர் யோகி வாழ்க்கை வாழ்பவர் அல்ல, வாழ்க்கையென்பது என்றென்றும் இருப்பதாகும், வாழ்க்கை

இயல்பாகிறது, யோகி வாழ்வென்பது இயற்கையான இயல்பான நினைவிலிருப்பதாகும்.

63 பிறவிகளின் மறதியெனும் பலவீனமான சம்ஸ்காரம் பிராமண வாழ்வில் முதன்மையான நிலை பெற்று முயற்சியில் தடையாகிறது. எவ்வளவு தான் ஒருவர் தனக்கே தெரிந்தபோதும் இதனை மாற்ற வேண்டும் என்ற கவனத்தில் கொண்டு வர முயற்சித்தாலும் தான் விரும்பாத போதும் என்ன சொல்கிறார்கள்? நான் விரும்பவில்லை ஆனாலும் எனது இயல்பானது, சுபாவமாயிற்றே, இந்த இயற்கை இயல்பாகியதே. யாரொருவர் ஞானம் யோகத்தை தனது பிராமண வாழ்வில் செயல்படுத்தாதவரோ அவரது வார்த்தையாக என்ன வெளிப்படும்? நான் பேசும் விதமே இதுதான், எனது வார்த்தையின் சப்தமே இது தான் என்பார்கள், மேலும் இன்னொரு வகையில் எனது பேச்சு வார்த்தை மற்றும் நடத்தையாவும் கம்பீரமானது என்பார்கள். மிக நல்ல வார்த்தையில் அலுவல் ரீதியானது (கத்தவில்லை) என்பார்கள். ஆக தெரிந்தும், புரிந்தும் இயற்கை இயல்பாக செயல்படுகிறது, இதற்கு விசேஷ முயற்சி ஏதும் தேவையில்லை. அவ்வாறே ஞானமும் யோகமும் முழுமையாக தமது பிராமண வாழ்வில் அமையப் பெற்றவர் ஒவ்வொரு செயலும் ஞானம், யோகம் நிரம்பியதாகவே இயல்பாகவே அமையும். இதனால் உயர் செயலும் யுக்தியுக்தான செயலும் இயல்பாகிறது. புரிந்ததா, இயற்கை இயல்பாகிறது . ஞானமும் யோகமும் முதன்மையான இயல்பாக வேண்டும். அப்போதே ஞானி, யோகி வாழ்க்கை வாழ்பவர் எனலாம்.

அனைவரும் ஞானிதான், யோகிதான் இருப்பினும் வேறுபாடு என்ன? ஒன்று ஞானம் கேட்பவர், சொல்பவர், சக்திக்கேற்ப கையாளுபவர். மற்றொன்று ஞான, யோகத்தை ஒவ்வொரு நேரமும் வாழ்வில் இயல்பாக கையாளுபவர் அனைவரும் மாணவர்களே. இருப்பினும் இந்த வேறுபாட்டால் நம்பர்வார் ஆகின்றனர். யாருடைய இயல்பே ஞானி யோகியாக இருக்குமோ அவருடைய தாரணையும் இயல்பாக இருக்கும். இயல்பு சுபாவம், சம்ஸ்காரமே தாரணை சொருபமாக அமைந்திருக்கும். மீண்டும் மீண்டும் ஒவ்வொரு குணத்தையும் கவனத்தில் வைத்து செயல்பட வேண்டிய நிலை ஏற்படாது. தனது வாழ்வின் அஸ்திவாரமே ஞானம், யோகம், தாரணையாக அமைத்துக் கொண்டதால் மூன்று பாடமும் அப்படிப்பட்ட ஆத்மாவிற்கு இயல்பான சுபாவமாகவே அனுபவமாகும். எனவே, அப்படிப்பட்ட ஆத்மாக்கள் சகஜயோகி, சகஜஞானி, சகஜ தாரணை மூர்த்தி என அழைக்கப்படுவார்கள். மூன்று பாடங்களும் தொடர்பு டையது. யாரிடம் இவ்வளவு அனுபவமெனும் பொக்கிஷம் முழுமையாக இருக்குமோ அப்படி முழுமையான மூர்த்திகள் இயல்பகாவே மாஸ்டர் வள்ளல் ஆகின்றனர். வள்ளல் என்றாலே சேவாதாரி. வள்ளல் வழங்காமல் இருக்க முடியாது. வள்ளலெனும் சமஸ்காரம் இயல்பாகவே சேவையெனும் பாடத்தை நடைமுறையில் சுலபமாக்குகிறது. ஆக நான்கு பாடமும் ஒன்றோ டொன்று இணைந்ததே. யாரேனும் தன்னிடம் ஞானம் நன்றாக உள்ளது தாரணையில் குறையுள்ளதென்றால் அவரை ஞானியென்று சொல்லலாகுமா? ஞானம் பிறருக்கும் தருவீர்கள், தன்னிடம் நடைமுறைப்படுத்துவது. புரிவதிலும், புரியவைப்பதிலும் அனைவரும் புத்திசாலி களே. ஆனால் நம்பர் ஒன் ஆக வேண்டுமெனில் ஞானம், யோகத்தை நடைமுறைப் படுத்துங் கள். பிறகு வரிசைக் கிரமம் ஏற்படாது. நம்பர் ஒன்

ஆவீர்கள்.

இன்று சத்யமான ஆசிரியர் நாலாபுறமுள்ள தனது ஈஸ்வரிய மாணவர்களைப் பார்த்துக் கொண்டிருப்பதைக் கேட்டீர்கள். என்ன பார்த்தார்? அனைவரும் நம்பர் ஒன்னாக தென்பட்டார் களா? நம்பர்வாரியாக தென்பட்டார்களா? ரிசல்ட் என்னவாயிற்று. நம்பர் ஒன்னாக ஒருவர் தானே வரமுடியும். நாமெல்லாம் நம்பர்வாரியாகத்தானே வர முடியும் என நினைக் கின்றீர்களா? முதல் டிவிசனில் வரமுடியும் தானே. அதில் ஒருவர் மட்டும் இருப்பதில்லை. சோதனை செய்யுங்கள் ஒருவேளை மீண்டும் மீண்டும் ஏதேனும் விசயத்தில் மனோநிலை மாறுகிறதெனில் ஞானமெனும் முதன்மையான பாடத்தில் இரு சொல்லான படைப்பவர் மற்றும் படைப்பினை இயற்கையாகவும் இயல்பான முறையிலும் சுபாவமாக்கவில்லை என்பது இதிலிருந்து தெரியவருகின்றது. பிராமண வாழ்வென்பது ஞானி, யோகி வாழ்வினை இயற்கையான முறையிலும் சுபாவமாக்கவில்லை என்பது இதிலிருந்து தெரியவருகின்றது. பிராமண வாழ்வென்பது ஞானி, யோகி வாழ்வினை இயற்கையான இயல்பாக சுபாவ, சம்ஸ்காரமாக்குவதே ஆகும். வாழ்க்கையென்பது எப்போதும், நிரந்தரம். 8 மணி நேரமோ 4 மணி நேரமோ வாழ்வாகாது. இன்று 10 மணி நேரம், இன்று 12 மணி நேரம், இன்று 2 மணி நேரம் யோகியானேன் என்பவர் யோகம் செய்யும் யோகியாவாரே தவிர யோகி வாழ்வை மேற்கொண்ட யோகியல்ல. குழுவாக பிரத்யேகமாக யோகத்தில் அமருவது யாதெனில், அனைவரின் யோக சக்தியால் உருவான வாயு மண்டலத்தின் மூலமாக பலவீனமான முயற்சி யாளர்களையும் உலகில் உள்ள அனைத்து ஆத்மாக்களையும் மாற்றுவதற்கான அவசியமும் உள்ளது. மாறாக தனது விடுபட்ட யோகத்தை இணைப்பதற்காக மட்டுமல்ல. குழுவின் சக்தியும் சேவைக்கு நிமித்தமானதேயாகும் மாறாக எனது தொடர்பை மீண்டும் மீண்டும் இணைப்பதற்காக மட்டும் யோக பட்டி என்பதில்லை. பலவீனமாக இருப்பதால் அமருகிறேன் என்பதல்ல, மாறாக யோகி ஆத்மா மாஸ்டர் சர்வசக்திவானாகி, மாஸ்டர் கல்யாணகாரியாகி அனைவருக்கும் ஒத்துழைப்பு தரும் சேவையும் செய்கின்றீர்கள். ஆக படிப்பு என்பதே நடைமுறையில் செய்வதாகும். நல்லது.

இன்று தீபாவளி கொண்டாட வந்துள்ளார்கள். கொண்டாட்டத்தின் அர்த்தம் என்ன? முக்கிய ஆத்மாக்களின் நினைவார்த்தம். நீங்கள் பார்ப்பவர்களா? உங்கள் அனைவரின் நினைவார்த்தம் உள்ளது. எனவேதான் இப்போதெல்லாம் பெரும்பாலும் தீபத்திற்குப் பதிலாக சிறிய சிறிய பல்ப்களை ஏற்றி விடுகிறார்கள். தீபமே ஏற்றினாலும் எண்ணிக்கை குறைகிறது. ஆனால் உங்களது எண்ணிக்கை அதிகமே, எனவேதான் அனைவரின் நினைவாக சின்னஞ்சிறிய பல்ப்களை கண்கவர் வண்ணங்களின் அலங்காரமாக ஏற்றி வைக்கின்றனர். எனவே தனது நினைவாகவே கொண்டாடுகின்றீர்கள். தீபத்தினைப் பார்க்கின்றபொழுது இது நமது நினைவுச் சின்னம் என்பது நினைவு வருகிறதா? நினைவு வருகின்றதா? சங்கமயுகத்தின் சிறப்பம்சமே என்னவெனில் சைத்தன்ய தீபமான நீங்களே தனது நினைவார்த்தமான ஜட தீபங்களைப் பார்க்கின்றீர்கள். சைத்தன்யமான தானே தமது ஜட நினைவார்த்ததைப் பார்க்கின்றீர்கள். என்று நீங்கள் தீபாவளி கொண்டாடுவீர்களோ அன்றே தீபாவளி நன்னாளாகும். உலகினர் ஒரு நாளை குறித்து வைத்துள்ளனர். ஆனால் பிராமணர்களாகிய நீங்கள் கொண்டாடும் நாளே உண்மையான தீபாவளி நன்னாளாகும். எந்த ஒரு நாளையும் குறிப்பதற்கு

யாரைக் கேட்பார்கள்? பிராமணர்களை வைத்து தான் நாள் குறிப்பிடுவார்கள். இன்று பாப்தாதா உள்நாடு, வெளிநாட்டின் சதா சுடர் விடும் தீபங்களான தீப மாலைக்கு வாழ்த்து வழங்குகின்றார். பாராட்டு தெரிவிக்கின்றார். தீபாவளி வாழ்த்து என்பது முழுமை நிலை பெற்று செல்வச் சீமான் ஆவதற்கான வாழ்த்து, பாராட்டுக்கள்.

சதா சுடர் விடும் தீபம், தனது பிரகாசத்தால் அனேகரின் இருளை நீக்கும் உண்மை தீபம், என்றென்றும் வாழ்வில் கொணருபவர்கள், அனைத்து பாடங்களிலும் நம்பர் ஒன் பெறும் லட்சியத்தை லட்சணத்தில் கொணர்பவர்கள், அவ்வாறான ஞானி, யோகி, தெய்வீக குணமுள்ள ஆத்மாக்கள், நிரந்தர சேவாதாரி உன்னதமான விஸ்வ கல்யாணகாரி ஆத்மாக்களுக்கு பாப்தாதா வின் அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்காரம்.

அவ்யக்த பாப்தாதாவின் நேரடி சந்திப்பு

முகத்திலும் நடத்தையிலும் மகிழ்வின் பொலிவை வெளிப்படுத்துபவரே அதிர்ஸ்டசாலி ஆவார்.

அனைவரும் தன்னை எப்போதும் அதிர்ஸ்டசாலியாக புரிந்துள்ளீர்களா? அதிர்ஷ்டசாலி ஆத்மாக் களின் அடையாளம் என்ன? அவரது முகத்திலும் நடத்தையிலும் மகிழ்வின் பொலிவு என்றென்றும் தென்படும்.செய்யும் செயல் எதுவாயினும் சாதாரண செயலேயாயினும் ஒவ்வொரு செயலிலும் மகிழ்வின் பொலிவு தென்படும். இதனையே நிரந்தர மகிழ்வில் மனம் நடனமாடுகிறது என்பார்கள். அப்படி எப்போதும் உள்ளீர்களா? அல்லது சில சமயம் மிகுதியாக சில நேரம் குறைவாக உள்ளதா? குஷியெனும் பொக்கிஷம் தனதாகி விட்டதா? தனது பொக்கிஷம் சதா தன்னுடன் இருக்குமல்லவா. அல்லது அவ்வப்போது இருக்குமா? பாபாவின் பொக்கிஷம் தனதாகி விட்டதா, தனது பொக்கிஷம் மறக்குமா தனது பொருள் நினைவிருக்கும் தானே. அந்த பொருள் கண்ணில் தென்படும் இந்த பொக்கிஷம் கண்ணில் தெரியாது. உள்ளத்தால் அனுபவம் செய்வீர்கள். அனுபவமான விசயம் எப்போதாவது மறக்குமா? நான் சதா மகிழ்வெனும் பொக்கிஷத்திற்கு எஜமான் என்பதை நினைவில் கொள்க. பொக்கிஷம் எவ்வளவு நினைவில் இருக்குமோ அவ்வளவே பெருமிதம் இருக்கும். அப்போது இந்த ஆன்மீக பெருமிதம் மற்றவர்களையும் இவரிடம் ஏதோ ஒன்று உள்ளது என்பதை அனுபவம் செய்ய வைக்கும்.

மாதர்களுக்கு எப்போதும் நினைவில் இருப்பது என்ன? பாபா நினைவு மட்டும் உள்ளதா வேறேதேனும் கூட நினைவில் உள்ளதா? ஆஸ்தியின் குஷி தென்படுகிறதா. பிராமண வாழ்விற்காக உலகமே ஒரு பாபா என்று ஆன பிறகு, அந்த உலகைத் தவிர வேறென்ன நினைவில் வரும், சதா தன் உள்ளத்தில் தனது உயர் பாக்கியத்தையே பாடலாக பாடிக் கொண்டே இருங்கள். இதுபோன்ற உயர் பாக்கியம் முழு கல்பத்திலும் கிடைக்குமா? முழு கல்பத்திலும் இப்போது மட்டுமே கிடைக்கிறது. ஆக இப்போதைய குஷி இப்போதைய பெருமிதம் அனைத்திலும் உயர்வாகும். மாதர்களுக்கு வேறெந்த சம்மந்தமும் நினைவில் வருகிறதா? ஏதேனும் சம்மந்தத்தில் ஏற்றத் தாழ்வு இருப்பின் மோகம் செல்கிறதா? மோகம் முற்றிலும் முடிவடைந்ததா? என்ன நடந்தாலும் எனக்கு மோகம் வராது என்பவர்கள் கை உயர்த்துங்கள். நல்லது! மோகமெனும்

சோதனை வந்தால் வரட்டும்? பாண்டவர்கள் மோகத்தை நஷ்டம் செய்தீர்களா. விவகாரத்தில் ஏதனும் ஏற்றத்தாழ்வு ஏற்படின், அப்போதும் நஷ்டமோகா நிலை இருக்குமா? இப்போதும் கூட இடையிடையே மாயை சோதனை செய் கிறதல்லவா, அதில் வெற்றியடைகிறீர்களா? அல்லது மாயை வரும்போதும் சற்று தொய்வு ஏற்பட்டு விடுகிறதா? ஆக எப்போதும் குஷியெனும் பாடல் பாடிக் கொண்டே இருங்கள். புரிந்ததா? எதுபோனாலும் குஷி மட்டும் போகக் கூடாது. அப்படி குஷியாக இருப்பவரே சதா அதிர்ஷ்டசாலி ஆவார். நல்லது.

இப்போது ஆந்திரா மற்றும் கர்நாடகா என்ன விந்தை செய்வீர்கள்? அப்படி ஒரு ஆத்மாவும் வஞ்சிக்கப் பட்டவராக இருந்து விடக் கூடாது. ஒவ்வொருவருக்கும் செய்தி தர வேண்டும். எங்கே இருந்தாலும் அனைத்து ஆத்மாக்களுக்கும் செய்தி கிடைக்க வேண்டும். எவ்வளவு செய்தி தருவீர்களோ அவ்வளவு குஷி அதிகரித்துக் கொண்டேயிருக்கும். நல்லது

வரதானம் : ஊக்கம், உற்சாகமெனும் ஆதாரத்தால் சதா பறக்கும் கலையை அனுபவம் செய்யும் தைரியவான் ஆகுக !

பறக்கும் கலையை அனுபவம் செய்ய தைரியம் மற்றும் ஊக்கம், உற்சாகமெனும் இயற்கை தேவை. எந்த செயலிலும் வெற்றிகாண ஊக்கம், உற்சாகம் மிகவும் அவசியம். ஒருவேளை ஊக்கம், உற்சாகம் இல்லையெனில் செயலில் வெற்றியில்லை ஊக்கம், உற்சாகம் இல்லை யெனில் களைப்பு ஏற்படும். களைப்படைந்தவர் ஒருபோதும் வெற்றி காண்பதில்லை. எனவே தைரியவனாகி ஊக்கம், உற்சாகத்தின் ஆதாரத்தால் பறந்து கொண்டேயிருந்தால் இலக்கை எட்டிவிடலாம்.

சுலோகன்: ஆசி தருக, ஆசி பெறுக இதுவே உயர் முயற்சியாகும்.